Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 30-11-1946 கார்த்திகை௴ 15உ. { மலர் 8

# தத்துவ விளக்கம்

## சேலம் காலேஜில் பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

### மதம்

இனி மதம் என்பதுபற்றிச் சிந்திப்போம்,

இன்றுள்ள தெளிவுப்படி மதங்கள் என்பவைகள் எல்லாம் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவைகளே யாகும். மனிதர்களில் அறிவாளி மடையன் என்றும், நல்லவன் கெட்டவன் என்றும், பொதுமக்களுக்கு உழைக்கின்றவன், தன் சுயநலத்துக்கு உழைக்கின்றவன் என்றும் தான்பிரிக்க முடிகிறதே தவிர மக்களில் கடவுள் சக்தி, கடவுள் தன்மை பெற்றவர்கள் என்றும், அவை பெறாதவர்கள் என்றும் பிரிப்பதற்கு இடமில்லை; அறிவும், ஆதாரமும், அநுபவமும் அதற்கு இல்லை. ஆகவே எந்த மதம், எவ்வளவு உயர்வான மதம் ஆனாலும் அது ஒரு அறிவாளியான, நல்ல பொதுநலக் கவலையுள்ள ஒரு பெரியாரால் உண்டாக்கப்பட்டது என்று தான் சொல்லலாமே தவிர தெய்வீகத் தனிச் சக்தி, தெய்வ சாயல் கொண்டவர்களால் ஏற்படுத்தப் பட்டது என்பது தத்துவ ஆராய்ச்சிக்கு நிற்காததாகும்.

தத்துவ ஆராய்ச்சி என்றால் என்ன?

குறளுக்கு மதிப்புரைதந்த ஒரு அறிஞர் "பொய்யெல்லாம் பொய்யே ஆயின; பொய் அல்லாத மெய்யெல்லாம் மெய்யே ஆயின" என்ற கருத்துத்தோன்ற

"பொய்ப்பால பொய்யே ஆயின
பொய்யல்லாத
மெய்ப்பால மெய் ஆயினவே"

என்று பாடினதுபோல் உண்மையாய் இருக்கமுடியாதவை எல்லாம் பட்டாங்கமாய்ப் பொய்ஆக வேண்டும், மறையவேண்டும்; உண்மைகள் உண்மை ஆகவேண்டும், பட்டாங்கமாய் வெளியாகவேண்டும். அப்படி இல்லையானால் அதற்குத் தத்துவ விசாரணை என்ற பெயர், செயல் பொருந்தாது. அப்படியில்லையானால் அது தத்துவ விளக்கம் என்னும் பேரால் பொய்யை மெய்யாக்குவது என்பதாகத் தான் முடியும். பொய்யிக்குத் தத்துவமும் உதவி செய்வதானால் அது பகுத்தறிவுள்ள மனிதத்தன்மை என்பதற்கு மிக இழிவாகும்.

ஆகவே மதத்தைப்பற்றி சிந்திக்கிற போது அதற்கு ஏன்? எதற்கு? ஆகமுதலிய கேள்விகளைப் போட்டுப் பார்த்தோமானால் அதற்கு "மதம் கடவுளுக்கும் மனிதனுக்கும் தொடர்பு உண்டாக்கி கடவுளை அடைவதற்காகத் தெய்வத் தன்மைகொண்ட மகான்களால் உற்பத்திசெய்யப்பட்டது." என்றெல்லாம் பதில் சொல்லுகிறார்கள். இப்போது தலைமை வகித்து இருக்கும் தலைவரவர்களும் தொடக்கத்தில் இதையேதான் சொன்னார்கள் இது தத்துவ ஆராய்ச்சிக்குப் பொருத்தமாக இருக்கிறதா? ஏன் என்றால், கடவுள் தன்மையைவிட மிக மிகப் பலம் குறைந்த காரியமாய் இருக்கிறது, கடவுளுக்கும் மனிதனுக்கும் வேறு ஒரு மனிதரோ கடவுள் தன்மை கொண்டவரோ சம்மந்தம் ஏற்படுத்தவேண்டும் என்பது. சம்மந்தம் என்றால் என்ன? எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல, யாவையும் நடத்துகிற கடவுளை யாருக்கு யார் சம்மந்தப்படுத்துவது? எதற்காக? எப்படி? மரம், செடி, பூச்சி, புழு, பட்சி, மிருகத்திற்கு யார் சம்மந்தப்படுத்துகிறார்கள்? அறிவற்ற, பகுத்தறிவற்ற மற்ற சராசரத்துக்குக் கடவுளை அறியவும் கடவுளை அடையவும் சம்மந்தப்படுத்த ஆள் (மதம்) தேவை இல்லை. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு ஒரு தெய்வீகச் சக்திபெற்ற மற்றொரு ஆள் மதம்காட்டவேண்டும்? சம்மந்தப்படுத்தவேண்டும் என்றால் இது தத்துவ விசாரணைக்கு நிற்குமா என்று கேட்கிறேன்.

மனிதரில் மேலே நான் சொன்னதுபோல் நல்லவன், அறிவாளி, பரோபகாரம் தயவு தாட்சண்யம் உள்ளவன் என்று பிரிக்கலாமே தவிர தெய்வீகச் சக்திபொருந்தியவன், தெய்வத் தன்மையுடையவன், தெய்வீகத் தன்மையோடு தெய்வத்தினால் உண்டாக்கப்பட்டவன் என்று சொல்ல என்ன நியாயமிருக்கிறது. சிலரை மாத்திரம் கடவுள் தெய்வத்தன்மையோடு சிருஷ்டித்தால் மற்றவர்களை யார் சிருஷ்டிக்கிறார்கள்? சாதாரண மிருகத்தன்மையோடு பல கோடி மக்களைச் சிருஷ்டித்து அவர்களைத் தனக்குச் சம்மந்தப்படுத்த என்று சிலரைத் தன்னுடைய தன்மையோடு (தெய்வத்தன்மையோடு) ஏன் சிருஷ்டிக்க வேண்டும்? ஒருவேலைக்கு இருவேலை, பலவேலை ஏன்?

"இதெல்லாம் கடவுள் இஷ்டம். அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது இந்த அளவுக்கு ஒப்புக்கொண்டுதான் மேலால் தத்துவ விளக்கம் பேசவேண்டும்" என்று சொல்லப்படுமானால் அது வேறு விஷயம். ஆனால் இங்கு நாம் பேசும் விஷயம் விதி

ரோஜா முத்தையா

விலக்கேயில்லாமல் அடியில் இருந்தே அதாவது கடவுள் மதத்தன்மையிலிருந்தே தத்துவம் பேசுகிற பேச்சாகும். தத்துவம் என்றால், தத்துவ விளக்கம் என்றால் அதில் கடவுளும் மதமும் சேர்ந்துதான் ஆகவேண்டுமே தவிர அவைகளை விட்டுவிட முடியாது.

மற்ற விஷயங்களுக்கு அதிகமாகத் தத்துவ விளக்கம் வேண்டியதில்லை. அநேகம் தாமாகவே 'தத்துவங்களாக இருக்கின்றன. தங்கம், பித்தளை நெருப்பு ஆகியவைபோன்றவைகளில் தத்துவ விளக்கம் தானாகவே தெரிகிறது. உரைத்துப் பார்த்தால் தெரிகிறது, தொட்டுப்பார்த்தால் தெரிகிறது, கண்ணால் பார்த்தால் தெரிகிறது. பார்க்காமல் அவைகளைக் காரியத்திற்கு ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் நாம் எடுத்துக்கொண்ட கடவுளும் மதமும் அப்படியில்லை. தத்துவத்தினால், சிந்தனையினால் அறியவேண்டி இருக்கின்றன. மெய்யாகவேண்டி இருக்கின்றன. இவைகளைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது என்றால் உண்மையான கடவுளை, மதத்தை அறியமுடியாமலே போய்விடும் பொய்க் கடவுள், பொய் மதம்தான் இருக்கமுடியும் அதாவது அவை ஒரு மூடநம்பிக்கைச்சாதனங்களாகத்தான் இருக்கமுடியும். ஆதலால்தான் சொல்லுகிறேன், மனிதன் கடவுளை அறிய, அடைய மற்றொரு மனிதன் அல்லது மதம் வழிகாட்டவேண்டுமா? கூட்டிவிடவேண்டுமா? என்றும் சிந்தித்துப் பாருங்கள் என்று.

முதலாவதாகக்கடவுளை அறியவும், அடையவும் மதம் என்றால், அதற்கு எத்தனை மதம்? என்று கணக்கில்லையா? அதற்கு எத்தனைத் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்பதும் கணக்கு இல்லையா? இந்த மதங்களுக்குள் தெய்வத்தன்மை ஏற்பட்டவர்களால் உண்டாக்கப்பட்ட மதங்களுக்குள், முரண்பாடு ஏன்? இந்த மதங்களுக்காகப் போராட்டம் துன்பம் வதை ஏன்? "இதெல்லாம் மக்களுடைய அறியாத் தனமே தவிர மதத்தின் தன்மை அல்ல" என்று சொல்லப்படுமானால் இந்த மதங்களால் பிரத்தியட்சத்தில நடமாடுகிற மனிதனையே மனிதன் அறியாமல் அடையாமல் உதை அடி துவேஷம் வெறுப்பு கொண்டு விலகி பிரிந்து இருக்கும்போது இனி காண முடியாததாய் சுலபத்தில் விளங்க முடியாததாய் இருக்கிற கடவுளை எப்படி அறியமுடியும்? அடைய முடியும்? என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு கலவரம் குத்து வெட்டு சண்டை நாசம் கேடு ஆகியவைகள் நடைபெற இடம் இருக்கும்படியான இப்படிப்பட்ட மதங்களைச் செய்தவர்கள் எப்படி தெய்வீகத்தன்மைகொண்டவர்களாக இருக்கமுடியும்? என்பதையும் சிந்தித்து,

இன்று இந்நாட்டில் மக்கள் ஒருவருடன் ஒருவர் பிரிந்து வேறுபட்டிருப்பதற்கும், துவேஷம் வெறுப்புக் கொண்டிருப்பதற்கும் மத ஒழுக்கத்துக்கும் தங்களுக்கும் சம்மந்தமே இல்லாமல் மனிதனை மனிதர் உண்ணுவதற்கும் மதம் காரணமா இல்லையா? கடவுள் அருள்பெற்ற தெய்வீகத் தன்மை பொருந்திய மகான்கள்என்பவர்களால் இத்தகைய மதங்கள் ஏற்பட்டிருக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கச்சொல்லுகிறேன். இந்த மதத் தலைவர்களுக்குத் தெய்வீகத் தன்மையை ஒட்டவைத்த பிறகு உலகில் அவர்களைப்பார்த்துக் கர்ப்பியடித்துப்பின்பற்றிய தெய்வீகத் தன்மை பொருந்திய ஆட்களுக்குக் கணக்கே இல்லாமல் போய்விட்டது அதற்கு எவ்விதத்தத்துவ விளக்கமும் பேசுவதற்கே இல்லாமல் போய்விட்டது. புத்தர், ஏசு, முகம்மது முதல் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சுவாமியார்கள், மகாத்மா, ரிஷி, சாயிபாபா வரையில் இன்னும் எத்தனையோ பேர் அந்தத்தலைப்பில் தோன்றிய வண்ணம், மறைந்த வண்ணம் இருப்பதோடு இவர்கள்பற்றி வாக்குவாதம் போராட்டம் முதலியன நடந்தவண்ணம் இருந்துவருகின்றன.

தயைதாட்சண்யம் விருப்புவெறுப்பு அற்ற பகுத்தறிவுப்பிரசாரமும், விசாரணையுமேற்பட்டபிறகுசமீபகாலமாக நிரந்தரமான எந்தத்தெய்வீகத்தன்மை கொண்டவரும் தோன்றவில்லை. உதாரணமாக, பல நூற்றாண்டுகளாக ஆழ்வார்களோ, நாயன்மார்களோ தாசர்களோ தோன்றவே இல்லை. அற்புத அதிசயம் செய்து நேரே கடவுளை அடைந்ததாகக் கதைகட்டவும் எவருக்கும் தைரியம் வரவில்லை. இதற்குக் காரணம் என்ன? இனிமேல் இப்படிப்பட்டவர்கள் உலகத்துக்குத் தேவை இல்லையா? யாவரும் கடவுளைக் கண்டுவிட்டார்களா? சம்மந்தம்வைத்துக்கொண்டார்களா? உலகம் செம்மைப்பட்டுவிட்டதா? மற்றென்ன? இன்றைய நிலை அவர்கள் தோன்றினார்கள் என்பது அநுமதிக்கக்கூடியதாக இல்லை. ஏதோ அங்கு இங்கு ஒன்று இரண்டு பேர்கள் காளான்கள் போல் தோற்றுவிக்கப்பட்டாலும் அது அவரவர் காலத்திலேயே முற்றுப்பெற்று மறைந்துபோகிறது. மதம் என்பதும், கடவுள் என்பதும் தத்துவ விளக்கத்தில் விழுந்தால் பிடிக்கப் பிடிக்க எட்டாதது போலும்தான் விளங்கும். ஆனால் ஏன் இவை இவ்விதம் கற்பிக்கப்பட்டன, என்பதுபற்றியும் மனித அமைப்பு, ஆத்மா முதலியவைபற்றியும் பேசியதும் பின்னால் வரும்,

(தொடரும்)

## வாழ்க்கை ஒப்பந்தம்

9-9-46ல் மத்தூரில் தோழர் எஸ். துரைசாமி அவர்களுக்கும் தோழியர் மங்களம் அவர்களுக்கும் தோழர் என். ராஜா சுப்ரமணிய செட்டியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தேறியது. அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 2ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டது.

## நன்கொடை

தோழர் எம். பி. இராசையா அவர்கள் குடியரசு வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்கள்.

## மணமகள் தேவை

கொங்குவேளாளர் வகுப்பைச் சேர்ந்த 25-வயதுடையவரும் (லோயர் கிரேட்) ஆசிரியப்பயிற்சிபெற்றவருமாகிய ஒரு வாலிபனுக்குப் பெண் தேவை. பெண் எவ்வகுப்பினராயினும் சம்மதம். விருப்பமிருப்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

C. D. Sarvottaman,
B.A., L.T.,
K. K. Training School,
VELUR (Salem)

# காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்

("சித்திராபுத்திரன்")

என் அருமைக் காங்கரஸ் திராவிடத் தோழரே! நீர் சூத்திரர்!...... அவர்கள் பார்ப்பனர்கள்! பிராமணர்கள்! மறந்துவிடாதீர்!

இந்த வீரமும் செழிப்பும் மிகுந்த திராவிட நாட்டில் நீ பழங்குடி மகன்.

இந்த நாடு உன்னுடையது; உனக்கே சொந்தமாக இருந்தது.

உனது முன்னோர்கள் இந்த நாட்டை ஆண்டவர்கள். அன்பையும் சமத்துவத்தையும் கடவுளாகவும் மதமாகவும் செங்கோலாகவும் கொண்டு ஆட்சி செலுத்தினவர்கள். நீ அவர்கள் சந்ததி. உண்மையாய், உறுதியாய் நீ அவர்கள் சந்ததி. உன் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி இரத்தமும் திராவிட சுத்த, வீர இரத்தமாகும்.

இன்று இங்குள்ள பார்ப்பனர்கள் ஆரியர்கள், ஆரியக் கொள்கையுடையவர்கள். ஆரிய இரத்தம் பெரிதும் உடையவர்கள் அவர்கள் யாவரும்.

வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்குப் பிழைப்புத் தேடிக் குடிஏறியவர்கள். மக்களை ஏய்ப்பதையும் பிச்சை எடுப்பதையும், பிழைப்புக்கு வழியாய்க் கொண்டவர்கள். வெறுப்பையும் வேற்றுமையும் கடவுளாக, மதமாகக் கொண்டவர்கள். உழைக்காமல் ஊரார் உழைப்பில் வாழ்வதை விட மற்றபடி இந்த நாட்டிற்கு எவ்வித பாத்தியதையும் பொறுப்பும் அற்றவர்கள் வாராத நோயும் ஆபத்தும் வந்து மக்கள் கும்பல் கும்பலாகச் செத்து, வண்டிவண்டியாய்ப் பிணங்கள் குவிந்தாலும், இந்த ஆரியப் பார்ப்பனர்கள் குதியாட்டம்போட்டு, கும்மாளம் அடிப்பார்களே தவிர, சிறிதும் மனங்கசியார்கள். ஏன்? இத்தனைப் பிணங்களுக்கும் அவற்றின் பின்னோர்கள் திதி, சிரார்த்தம், திவசம் செய்தால் எத்தனைலாபம்வரும்? இதனால் தங்கள் மக்களில் எத்தனை பேர்களை ஐ. சி. எஸ். ஹைகோர்ட் ஜட்ஜிகள், வக்கீல்கள், டாக்டர்கள் ஆக்கி, 'அமர' வாழ்வு வாழலாம் என்று ஆனந்தக் கூத்தாடுவார்கள்.

ஏழு வகையப்பா! கேள்!

தோழனே! அருமைத் தோழனே!! இப்போது சிறிது சிந்தித்துப்பார். உனக்கும் ஆரியனுக்கும் இந்த நாட்டில் இருக்கும் தன்மைகளை! நீ சூத்திரன்; அதுவும் ஏழுவகைப்பட்ட சூத்திரன் வகைகளைச் சொல்லுகிறேன் கேள்:-

1. யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டவன்.

2. பிராமணனுடைய தேவடியாள் (தாசி) மகன்.

3. விலைக்கு வாங்கப்பட்டவன்.

4. பிராமணனுக்கு ஒருவனால் தொண்டுசெய்ய கொடுக்கப்பட்டவன்.

5. பரம்பரை அடிமை.

6, கைதியாகப் (குற்றவாளியாக பிராமணனுக்குத்தொண்டு செய்பவன்

7. மோட்சமடைவதற்காகப் பிராமணனுக்குப் பக்திகொண்டு வேலை செய்பவன்.

(மனு, அத். 8: விதி: 415,

இப்படிப்பட்ட உனக்கு (சூத்திரனுக்கு)உள்ளஉரிமைஎன்ன என்றுகேள!

1. பிராமணன் கூலிகொடுத்தும் கூலி கொடுக்காமலும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம்.

(மனு அத்.8, விதி: 43)

2, பிராமணனால் கூலிகொடுக்கப்படாவிட்டாலும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டாலும் சூத்திரன் வேலை செய்யவேண்டிய பொறுப்பிலிருந்து நீங்கியவனாக மாட்டான். (மனு அத் 8 விதி: 414)

3. சூத்திரன பொருள் எதுவாய் இருந்தாலும் அது பிராமணனுக்கே சொந்தமானதாகும்.

(மனு அத். 8-விதி 416)

4. சூத்திரர்களின் பொருள்கள் யாவற்றையும் பிராமணன் சிறிதும் தயக்கமின்றிப் பலாத்காரமாகக் கைப்பற்றிக்கொள்ளலாம். சூத்திரர்களுக்குத் தொண்டுதான் சொந்தமே ஒழிய பொருளுக்குக் கொஞ்சமும் அவன் சொந்தக்காரனல்ல.

(மனு அத் 8 விதி: 417)

5. சூத்திரனைப் பிராமணத் தொண்டுசெய்யும்படி அரசன் கட்டளை இடவேண்டும்.

(மனு அத் 8 விதி: 418)

இந்த மனுதர்ம சாஸ்திரத்தைத்தான் ஆதாரமாய்க் கொண்டு 'இந்து லா' செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சாஸ்திரத்தை இராஜ நீதியாகக்கொண்ட ராமராஜ்யம் தான் காங்கரஸ் கோரும் சுயராஜ்யம்!

காங்கரஸ் தேசியத் தோழனே! இவற்றில் நீ எதை மறுக்கிறாய்? எதை நீ பொய் என்கிறாய்?

எல்லாம் பட்டங்களே!

பிரிட்டிஷ் சர்க்கார், பெத்தாபுரம் நாயுடு ஜமீன்தாரை மகாராஜா என்பது போலும், நாட்டுக்கோட்டை செட்டியாரான மு. அண்ணாமலை செட்டியாரை ராஜா சர் என்பது போலவும், வாணியச் செட்டியாரான ஆர். கே. ஷண்முகம் செட்டியாரை சர் என்பது போலவும்,—பார்ப்பனர் உன்னை 'தேசபக்தன்" "தேசியவாதி" "ஆகஸ்ட் தியாகி" என்கிறார்கள். உங்களில் ஒருவரை மகாத்மா என்கிறார்கள் என்பதல்லாமல் உனக்கு இருக்கும் பிறவி யோக்கியதை என்ன? சிந்தித்துப்பார்!

பிரிட்டிஷ்காரன் அடியோடு ஒழிந்த பிறகு, "நம்முடைய" ராஜ்யமாகவே ஆய்விட்டபிறகு, உனக்கு இருக்கக்கூடிய நிலை என்ன என்பதை யோசித்துப்பார்.

ஆனால் இதே சமயத்தில் ஒரு மதுரை வைத்தியநாதய்யருக்கும், ஒரு சோமயாஜுலுவுக்கும, ஒரு சுப்புலட்சுமி சதாசிவ அய்யருக்கும், என்ன யோக்கியதை இருக்கும் என்பதை எண்ணிப்பார்!

அட பரிதாபமே! நீ சூத்திரனா? மேல் சொல்லப்பட்ட ஆட்கள் பிராமணர்களா?

இந்த பேதத்தைப்பற்றி எப்போதாவது சிந்தித்தாயா? உனக்கு சமீப ஆயிரங் காலத்திய முன்னோர்களாவது சிந்தித்தார்களா?

உன்னுடைய பக்தி, தேசபக்தியா? பிராமண (பார்ப்பார) பக்தியா? நீ தேசியவாதியா? பிராமணீய (பார்ப்பனீய வாதியா?

நீ தேசபக்தனா, பார்ப்பனப்பக்

(தொடர்ச்சி 8-பக்கம்)

ரோஜா முத்தையா

குடி அரசு

1946 ௵ நவம்பர் ௴ 30௳

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது வகுப்பு நீதி வழங்குதல் என்ற கருத்தைக் கொண்டதே தவிர தேசியத்துக்கு விரோதமானதோ, சுதந்திரத்துக்கு எதிரானதோ, விடுதலையைக் கெடுப்பதோ அல்ல என்பதே அறிவுள்ளவர் கருத்தாகும்.

இந்த இந்தியா கண்டமானது பலஜாதி, பல மதம், பல வகுப்புகள் கொண்ட பிரதேசமாக இருந்து வருவதால் இந்திய அரசியல்தத்துவம் என்பது ஜாதியை, மதத்தை, வகுப்பை அடிப்படையாகக் கொண்டதாக இருந்து வருகிறது.

உதாரணமாகக் காங்கரஸ் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டதின் காரணமே மத அடிப்படையைக் கொண்டேயாகும். காங்கரசிற்குமுன் வடநாட்டில் பெரிதும் உத்தியோகம் ஆதிக்கம் முதலியவை பெரும்பாலும் முஸ்லிம்களின் கையில் இருக்க நேர்ந்தது. அதை மாற்றவே காங்கரஸ் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய சுயராஜ்யத்துக்கு ஆகவோ, வெள்ளையனை விரட்டுவதற்கு ஆகவோ சமுதாய பொருளாதார நலனுக்கோ அல்ல என்பது காங்கரஸ் சரித்திரம் தெரிந்த அறிவாளிகளுக்குத் தெளிவாய் விளங்கும்.

மற்றும் காங்கரசைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் காங்கரஸ் பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழவும், பிரிட்டிஷாருக்கு இந்தியர்கள் நன்றி செலுத்தி இராஜவிஸ்வாசம் காட்டவும், பிரிட்டிஷ் ஆட்சியே இந்தியாவில் நீடூழி காலம் இருந்துவரவும்தான் காங்கரசுக்கு முக்கிய கொள்கையாய், முக்கிய தீர்மானங்களாய், காங்கரஸ்காரர்களின் முக்கிய கடமையாய் இருந்து வந்தது எனலாம்.

இந்தியரின் இந்தக் கடமைக்குப் பரிகாரமாக முஸ்லிம் அல்லாதாருக்கு ஏராளமான புதுப்புது, பெரிய பெரிய உத்தியோகங்கள் பதவிகள் கிடைத்து வந்தன.

பிறகு நாளாக நாளாக இந்த உத்தியோகங்களில் பதவிகளில் பங்குபெற ஆசைப்பட்டே இந்திய அரசியலின் போக்கால் நாட்டில் பல கட்சிகள் தோன்றின.

அவைகள்தான் முஸ்லிம் லீக், திராவிடகழகம் என்று இப்போது அழைக்கப்படுகிற ஜஸ்டிஸ் கட்சி, மிதவாதிகள் என்று அழைக்கப்படுகிற மாடரேட்ஸ் அல்லது லிபரல் கட்சி, ஷெட்டியூல் வகுப்பு கட்சி, பார்சீகள் கட்சி, சீக்கியர்கள் கட்சி மற்றும் பல சில்லரைக் கட்சிகளுமாகும்.

இத்தனைக் கட்சிகளுக்கும் பதவியும் உத்தியோகமும் பங்கு போடவேண்டி இருந்தாலும் காங்கரஸ் முதல்முதல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனமானதாலும் மற்றகட்சிகளைக் குறைகூறும் தன்மையில் தனது லட்சியத்தையும் திட்டத்தையும் வெறும் தந்திரத்தையே அடிப்படையாய் வைத்துப் பித்தலாட்டமாக மக்களுக்குக் காட்டியதோடு அந்த மாதிரியான பித்தலாட்டத் தன்மைகளை மற்றவர்கள் பின்பற்ற முடியாமல் இருக்கும்படி மிக்கக் கீழ்தரமான காரியங்களைக் கையாடி மற்ற கட்சியாருக்குத் தொல்லை கொடுப்பதையே முக்கிய காரியமாகச் செய்துவந்தது. இதன் பயனாகவே இன்று நாட்டில் சுமார் 40, 50 வருடங்களுக்கு முன்பு இருந்த நாணயம், ஒழுக்கம் அன்பு மனிதனுக்கு மனிதன் இருந்துவந்த நேசபாவம் முதலியவைகள் ஒழிந்து பலாத்காரமிருகப்பிராயத்துக்கு மக்கள் ஆளாக்கப்பட்டுவிட்டனர்.

அது எப்படியானாலும் இந்தியமக்கள் லட்சியம் உத்தியோகம், பதவி என்பது வளர்ந்து பெருகி நிலைநின்றுவிட்டது என்பதுடன் அதற்காகப் போராடி சனசமூகம் மடியப்போகின்றது என்கின்ற நிலையை அணுகிக்கொண்டு போகிறது.

இதுவரையில் மற்றவர்களைக் காங்கரஸ்காரர்கள் பதவிவேட்டைக்காரர் என்று சொல்லி ஏமாற்றி சகல பதவி உத்தியோகம்யாவும் காங்கரசுக்கே வரும்படியாகக் காங்கரஸ் செய்துவந்த தந்திரங்கள்யாவும் வெற்றிபெற்று காங்கரசே எல்லாப் பதவியையும் அடையும்படியான காலம் இன்று வந்துவிட்டவுடன் வெளிப்போராட்டங்கள் பலப்பட்டுவிட்டதோடு மாத்திரமல்லாமல் காங்கரசுக்குள்ளாகவே போராட்டங்கள் தோன்றும் அறிகுறிகளும் காணப்படுகின்றன.

மத்திய அரசாங்கத்தில் ஜனப்பிரதிநிதிகளை நியமிப்பதற்குப் பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டவுடன் இந்துக்களுக்கு எத்தனை? முஸ்லிம்களுக்கு எத்தனை? சீக்கியர்களுக்கு எத்தனை? தீண்டப்படாத கீழ்ஜாதி இந்துக்கள் என்பவர்களுக்கு எத்தனை? இவர்களை எந்தக்கட்சியார் நியமிப்பது? என்கின்றதான கலவரங்கள் ஏற்பட்டு அவை பெரும் போராட்டமாக மூண்டு பதினாயிரக்கணக்கில் மக்கள் மடிகிறார்கள், கோடிக்கணக்கான கணக்கில் சொத்துக்கள் நாசமாகின்றன. பல இடங்களில் இராணுவ ஆதரவிலும் போலீஸ் காவலிலும் மக்

கள் வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இவை ஜாதி மத வகுப்புகளால் ஏற்பட்டவைகள்தானே ஒழிய அரசியல் சுதந்தரமோ சுயராஜ்யமோ இல்லாததால் ஏற்பட்டவைகள் அல்ல என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஒருசமயம் பூரண சுயராஜ்யம் இல்லாததால் என்று யாராவது சொல்லுவதானாலும் அந்தப் பூரண சுயராஜ்யம் என்பதும் இந்த ஜாதி மத வகுப்புத் தொல்லைகளாலேயே தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஐரோப்பிய யுத்தம் நேசக் கட்சியாருக்குவெற்றியாகமுடிந்தவுடன் நேசக்கட்சியாராகிய பிரிட்டன், அமெரிக்கா, பிரெஞ்சு ஆகியவர்கள் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் "அன்னிய நாடுகளைவிட்டு, தங்கள் ஆதிக்கத்தை ஆட்சியை விலக்கிக் கொள்ளுகிறோம்" என்று உலகத்தாருக்கு வாக்குக் கொடுத்தபடி விலகிக்கொள்ளுகிற வேலையில் முனைந்துவிட்டார்கள். அமெரிக்கர் பிலிபைன் முதலிய தீவுகளைப் பூரண சுயேச்சையுள்ள நாடுகளாக ஆக்கி வருகிறார்கள். இதில் பிலிபைன் தீவுக்காரர்களே நம்பிக்கைக்கொண்டு திருப்தி அடைந்து வருகிறார்கள். பிரஞ்சுக்காரர்களும் அதைப் பின்பற்றுகிறார்கள். பிரிட்டிஷாரும் அதற்குத்தக்க ஏற்பாடுகளை "உண்மை உள்ளத்தோடு நாணயமாக" (இது காந்தியார் சொன்னது) நடத்தி வருகிறார்கள்.

பிரிட்டிஷ் மந்திரிகள் தூதுவர்கள் இந்தியாவுக்கு வந்து மாதக்கணக்கில் இருந்து தாங்கள் விலகும் விஷயத்தில் உறுதி கொடுத்து, திட்டம் போட்டார்கள். இந்தத் திட்டத்தில் ஒரு இடத்தில் ஒரு கட்டத்தில்கூட அரசியல் அதிகாரப்பேச்சு முட்டுக்கட்டையாக இருக்கவே இல்லை. அரசியலில் கவர்னர் ஜனால் தனது "விசேஷ அதிகாரத்தைப் பயன் படுத்துவதில்லை" என்று சொல்லிவிட்டார், சேனாதிபதியையும் "மத்திய சர்க்கார் மெம்பர்கள் வசம் ஒப்புவிப்பதாக மந்திரிகள் கோஷ்டி ஒப்புக்கொண்டு விட்டது". இதை நம்பி "இந்திய "ஜனப் பிரதிநிதி தலைவர்கள்" பதவியில் அமர்ந்து சம்பளமும் வாங்கி ஆய்விட்டது. இந்நிலையில் இந்தியமக்கள் பதினாயிரக் கணக்கில் ஏன் கொல்லப்படவேண்டும், சொத்துக்கள் கோடிக்கணக்கில் ஏன் நாசமாக்கப்படவேண்டும்? இவைகளுக்குக் காரணம் ஜாதி மத வகுப்புத் தகரார் அல்லாமல் வேறு எதைச் சொல்லுவது?

நாட்டுக்கு நாடு அதிகார ஆதிக்கப் பேராசை இல்லாமல் அததை தனித்தனியாய்ப் பிரித்து விட்டுவிடுவதாய் இருந்தால் கலகமே விளைய இடமில்லை என்பதும், வகுப்புக்கு வகுப்பு, ஜாதிக்கு ஜாதி ஆதிக்கம் அதிகாரம் செய்ய சூட்சி செய்யாமல் விகிதாச்சாரம், கல்வி, பொருளாதார வசதி, உத்தியோகம், பதவி இருக்கும்படி செய்துவிட்டால் உள்மாகாணக் கலவரங்கள், கட்சிப் போராட்டங்கள், அரசியல் பித்தலாட்டங்கள் நடப்பதற்கு இடமே ஏற்படாமல் போய்விடும் என்பதும் உறுதியாகும்.

உதாரணமாகத் திராவிடநாட்டை அதாவது சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால் இங்குநடப்பது அரசியல்கட்சிப் போராட்டமா? அல்லது ஒரு ஜாதியின் பேராசை, சூழ்ச்சிப் பித்தலாட்டத்தால் விளைந்த விளைவு போராட்டமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

திராவிடநாட்டில் பதவிகள், பெரும் உத்தியோகங்கள், பாடுபடாமல் சராசரி வரும்படிக்கு 100க்கு 1000 பங்குக்கு மேலாகக் கொள்ளை அடித்து உயர்வாழ்வு வாழும் வாழ்க்கை போகபோக்கியங்கள் ஆகியவை பார்ப்பனர்கள் என்கின்ற ஒரு ஜாதியாருக்கே பெரிதும் ஏக போகமாய் இருந்துவருவது தேசியமாய் இருக்கக்காரணம் என்ன? இப்படி இருந்தால் மற்ற ஜாதி, வகுப்பார்கள் ஆத்திரப்பட மாட்டார்களா? கட்சி ஏற்படுத்த மாட்டார்களா? வங்காளம், பீகார், நவகாளி போல் திராவிடநாடும் ஒரு நாளைக்குப் பார்ப்பனர் திராவிடர் என்கின்றதான கலவரங்களுக்கு அடிமை ஆகாதா என்று கேட்கிறோம்.

அந்தந்த ஜாதி வகுப்புக்கு எண்ணிக்கைக்குத் தக்கபடி அதிகாரம் பதவி, உத்தியோகம் கல்வி, வருவாய் முதலியவைகளைப் பிரித்துவிடுவதினால் எப்படி தேசியம் கெட்டுப்போகும்? இன்று தமிழ்நாட்டில் உள்ள கிருஸ்தவர்களும் முஸ்லிம்களும் திராவிட மக்களேயாகும். அவர்களுடைய புத்தி திறமை சக்தியாவும் திராவிடர்களுக்குச் சராசரி எவ்வளவோ அவ்வளவையே கொண்டதாகும். அப்படி இருக்க இங்கு சென்னை மாகாணத்தில் இந்த இரு கூட்டத்தாருக்குமாத்திரம் அவர்கள் ஜன எண்ணிக்கைக்குத் தகுந்தபடியும் மேலாகவும் முறையே அநுபவிக்கக் கொடுத்துவிட்டு திராவிட மக்களை ஏமாற்றி ஆதித்திராவிடர்களை வஞ்சித்து அடியோடு அவ்வளவையும் பெரும்பாகமாகப் பார்ப்பனர்கள் மாத்திரம் அநுபவிக்கக் காரணம் என்ன? என்று கேட்கிறோம்.

ஜன எண்ணிக்கைப்படியும் மேலும் விகிதாச்சாரம் பெற, முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் சக்தி திறமை தகுதி இருக்கும்போது திராவிடர்

களுக்கு ஏன் இல்லாமல் போய்விட்டது.

உதாரணமாக இன்று சென்னை ஐகோர்ட்டில் இரண்டு முஸ்லீம் ஜட்ஜுகள் இருக்கிறார்கள். ஐ. சி. எஸ், கலெக்டர் ஆகிய பதவிகளில் 7. 8பேர்கள் இருக்கிறார்கள். தமிழர்களில் ஏன் அதில் 4ல் ஒரு பங்குகூட இல்லை? ஆனால் பார்ப்பனர்கள்மாத்திரம் ஏராளமாய் இருக்கிறார்களே அது ஏன்? இதுதான் தேசியமா? என்று கேட்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியார் துவக்கத்தில் இந்த வகுப்புவாரி உரிமையை முக்கியமாய்க் குறித்துக் கொண்டுதான் கட்சியை நடத்தினார்கள். அவர்கள் முயற்சியால் ஏற்பட்ட ஏதோ ஒரு சிறு அளவினால்தான் இன்று சில திராவிடராவது பதவியில் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். மற்றவர்கள் தகுதி திறமை புத்தி, சக்தி காரணங்கள் சொல்லி அழுத்தப்பட்டு விட்டதோடு புத்தி திறமை சக்தி என்பனவைகளில் சிறிதும் பரீட்சை செய்யாமல் தங்களின் நிபந்தனை அற்ற அடிமைகளைப் பதவிகளுக்கும் பொறுக்கி எடுத்து அவர்களைக் கொண்டே அவரவர்கள் ஜாதி வகுப்புகளை ஒழிக்கத்தக்க ஆட்களுக்குப் பிச்சைக்கொடுப்பதுபோலும எச்சிலைக்கொடுப்பது போலவும் சில கொடுத்து வகுப்புத்துரோகம், வகுப்பு இழிவுசெய்யச்செய்துகொண்டு இதைத் தேசிய சர்க்கார் என்கிறார்கள் பார்ப்பனரும் அவர்களது கூலிகளும்.

உதாரணமாக அவனாசிலிங்கம் செட்டியார் என்கின்ற ஒரு திராவிடர் கல்வி மந்திரியானார். அவர் சொல்லுகிறார் "பார்ப்பனர்கள் போல் திராவிடர்களுக்குத் தகுதித் திறமை இல்லை" என்று.

எதற்கு? உத்தியோகத்திற்கு கூட அல்ல—பள்ளியில் படிக்க சேர்த்துக்கொள்வதற்கே இப்படிச் சொல்லி அநேக திராவிடப் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தகுதி, திறமை பேரால் அநேகப் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு இடம் கொடுத்தார்.

ஆனால் இதே அவனாசிலிங்கமவர்கள் முஸ்லிமுக்கும் கிறிஸ்தவருக்கும், ஏன்? ஆதித்திராவிடருக்கும் கூட இந்த மாதிரி தகுதி, திறமை, புத்தி ஒன்றும் பார்க்கவே இல்லை.

இப்படி நடந்தால் இதைப் பார்ப்பன ஆதிக்க தேசியம் என்பதா? அல்லது உண்மை தேசியமென்பதா? மற்றும் இப்போது வழங்கப்படும் உத்தியோகம் பதவி எல்லாம் பார்ப்பன அடிமைகளுக்குச் சூத்திரப் பட்டத்தைச் சடகோபம்போல் ஏற்றுக்கொண்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர சிறிதுகூட சுயமரியாதைஉள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுவதே இல்லை இதுவும் தங்கள் இஷ்டப்படி செய்யப்படுகிறதே தவிர ஒரு யோக்கியமான திட்டத்தின்படியாயும் இல்லை இன்னும் இதுபோன்ற சூழ்ச்சிகளை ஏற்படடபோகும நீதி நிர்வாக இலாக்காப் பிரிவினை அமைப்பில் பார்த்தால் மக்கள் வயிறு எறியும்.

ஆனால் இந்த அக்கிரமங்களும் துரோகத் தன்மைகளும் இப்போது காங்கரசில்—இருக்கும் திராவிடர்களாலேயே இன்று வெளியாகப்படுகின்றன. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்பது தேசத்துரோகம் என்றும் அது கேட்காமலும் அது கூடாது என்றும் சொல்லுகிறவர்களே தேச பக்தர்கள் என்றும் சொல்லி காங்கரசுக்குக்கங்காணிகளைச் சேர்த்தார்கள். அப்படி இருந்தும் இப்போது அவர்களே காங்கரசின் வண்டவாளத்தை வெளிப்படுத்துவதோடு தங்களைப் பார்ப்பனர்கள் ஏமாற்றியதையும் வெளியாக்கி அழுகிறார்கள்.

உதாரணமாக வன்னியகுல க்ஷத்திரியர்கள் என்றும், படையாட்சி வகுப்பார் இந்த நாட்டில் 50 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். முக்குலத்தார் என்பவர்கள் அதாவது கள்ளர் மறவர் அகம் உடையார்கள் 50 இலட்சத்திற்கு மேலாகவே இருப்பார்கள். பார்க்கவர்கள் என்பவர்கள் 10இலட்சத்துக்கு மேலாக இருப்பார்கள். இவர்களில் காங்கரஸ்காரர்களே தங்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லை என்றும், தங்களில் தகுதி உள்ளவர்கள் எத்தனையோ பேர் இருக்க மந்திரி சபையில், அரசியல் நிர்ணய சபையில் ஸ்தானம் இல்லை என்றும், மற்ற பதவிகள் உத்தியோகங்கள் சரிவர அளிக்கப்படவில்லை என்றும் குறைகூறி பிரதம மந்திரிக்கும், சர்தார் பட்டேலுக்கும், கவர்மெண்டுக்கும் விண்ணப்பம் போட்டுக் கெஞ்சுகிறார்கள்.

இந்தக்குறைகளைக்காங்கரஸ் எம். எல். ஏ.க்களே சொல்லி துண்டு நோட்டீஸ் போடுகிறார்கள். உதாரணமாக வன்னியகுல க்ஷத்திரி சமூகத்தில் 7 எம். எல். ஏ.க்கள் தங்கள் வகுப்பு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி நடத்தப்படவில்லை என்றும், மிகவும் மோசம் செய்யப்பட்டுவிட்டதென்றும், காங்கரஸ் தலைவர்களிடம் பிராதுசெய்திருக்கிறார்கள். அவர்கள் தோழர்கள் எ. சுப்ரமணியம், வி. கோவிந்தராஜ நாயகர், பொன்னுசாமி கண்டர், எம். கன்னியப்பன், அஞ்சலை அம்மாள், எஸ். பரமானந்தம், பி. ஆர். சீனிவாச படையாட்சி ஆகிய காங்கரஸ் எம். எல். ஏ. ஆவார்கள்.

மற்றும் ஆதித்திராவிடர்களு

ரோஜா முத்தையா

க்கு 100க்கு 12½ விகிதம் பதவிகள், உத்தியோகங்கள் கொடுக்கவேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் அநுமதிவாங்கி சென்னை சர்க்காருக்குக் கட்டளை இடச்செய்துவிட்டார் என்றால் அதைப்பெற்றுக்கொண்டு "தகுதியான ஆள்கள் கிடைப்பதில்லை" என்று அந்த உத்திரவைக் குப்பையில்போட்டுவிட்டார்கள். சென்னை மந்திரிகள் தகுதியானவர்கள் விகிதாச்சாரம் கேட்டால் "அது தேசியத்துக்கு விரோதம்" என்கிறார்கள். உதைக்கிறவர்களைக் கண்டால் உடனே கொடுத்துவிடுகிறார்கள். அடிமைகளை, "சூத்திரர்களை", "பஞ்சமர்களைக் கண்டால் ஏறி மிதிக்கிறார்கள். இதுதான் இந்திய தேசியம் மாத்திரமல்லாமல் மாகாண சுயராஜ்யமாகவும் இருந்துவருகிறது. இதற்குக் காரணம் கங்காணிகள் செய்யும் துரோகமே ஒழிய பார்ப்பனர் பேரிலேயே குற்றம் சொல்ல முடியாது. ஆதலால் இனியாவது கங்காணிகளுக்குப் புத்தியும் மானமும் நாணயமும் வந்து வகுப்புவாரி உத்திரவை கிருஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அமுலில் இருப்பதுபோல் திராவிடர்களுக்கும் இருக்கும்படி செய்யமாட்டார்களா என்று ஆசைப்பட்டுஏங்கி நிற்கிறோம்.

## கார்த்திகைப் பண்டிகை

கார்த்திகைப் பண்டிகை வரப்போகின்றது. திராவிட மக்களின் அறிவைப் பாழ்படுத்துவதற்கெனத் திராவிடநாட்டில் தோற்றுவிக்கப்பட்ட பண்டிகைகளுள் கார்த்திகையும் ஒன்று என்பதை நாம் பல ஆண்டுகளாகக்கூறி வந்துள்ளோம். இருந்தபோதிலும் திராவிடர்களுள் பலர் தங்கள் அறிவையும் மானத்தையும் இழந்து இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

இப்போழ்து காலம் மிக நெருக்கடியானது. எங்கும் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. 'உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை' என்ற பேச்சே மக்களின் அன்றாடப் பேச்சாகவுள்ளது. இந்நிலையில் நூற்றுக்கணக்கான 'டன்' எடையுள்ள விறகுகள் வீணாகக் கொளுத்தப்படப் போகின்றன. அளவில்லாத எண்ணெய்யும், நெய்யும் பாழ்படுத்தப்படப் போகின்றன. புகைவண்டி (இரயில்) வசதி போதிய அளவில் இல்லாத இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கார்த்திகைத் தீபங்காண திருவண்ணாமலைக்குச் சென்று, பல வகையிலும் தொல்லைப் படத்தான் போகின்றார்கள்.

இவர்களுக்கு என்றுதான் அறிவுக்கண் திறக்கப்படுமோ? இவர்களின் அறிவிழந்த செயல்களை அடியோடு ஒழிக்க இன்னும் எத்தனையாண்டுகள் தேவையோ?

ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்கள் "கார்த்திகைப் பண்டிகையை ஏன் திராவிடர்கள், கொண்டாடக் கூடாது" என்பதைப் பிற மக்களுக்கு எடுத்தியம்ப வேண்டுகின்றோம்.

## புது மேயருக்கு நன்றி

தோழர் டி. சுந்தரராவ் நாயுடு அவர்கள் சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டு நாம் பெரிதும் மகிழ்கின்றோம். சென்னையில் காங்கரஸ் மந்திரிசபை ஆட்சி நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் காங்கரசை எதிர்த்துத் தேர்தலுக்கு நின்ற தோழர் சுந்தரராவ் அவர்கள் வெற்றிபெற்றார் என்ற செய்தி நமது மகிழ்ச்சியை இரட்டிக்கச் செய்கின்றது.

தோழர் சுந்தரராவ் அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றது காங்கரஸ் வட்டாரங்களில் பெருத்த பாபரப்பையுண்டு பண்ணியிருக்கும் என்பதை நாம் கூறவேண்டியதில்லை. இனி வருங்காலத்தில் காங்கரஸ்காரர்களுக்குச் செல்வாக்கு நாட்டில் குறைந்துபோகும் என்பதற்கு அறிகுறி சுந்தரராவ் அவர்களின் வெற்றி என்று கூறலாம்.

தோழர் சுந்தரராவ் அவர்கள் இரண்டு ஆண்டிற்கு முன்னதாகவே மேயராக வந்திருக்க வேண்டியவர். சிறந்த ஆற்றலுடையவர். திராவிடர்கள் முன்னேறவேண்டும் என்ற கருத்துடையவர். எனவே அவரின் ஓராண்டுகால ஆட்சியில் திராவிட மக்களுக்கு நலம் பல நல்குவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

(ஆ-ர்)

## பட்டுக்கோட்டைக்குப் பெரியார் வருகை

தஞ்சை ஜில்லா நிதி வசூல் விஷயமாகவும், ஜில்லாவில் கருப்புச்சட்டைப்படை, மற்றும் பல விஷயங்கள் சம்மந்தமாகவும் பட்டுக்கோட்டையில் இயக்க முக்கிய வேலை செய்பவர்கள் கூட்டம் ஒன்று சில தோழர்களால் ஏற்பாடுசெய்து பெரியார் அவர்களை வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து பெரியார் அவர்களும் பட்டுக்கோட்டைக்கு 8-12-46ந் தேதி ஞாயிற்றுக்கிழமைசெல்வதாகத் தெரிவித்து இருக்கிறார். அவசியம் செல்வார். ஆகவே முக்கிய தொண்டாற்றுபவர்களும், பிரமுகர்களும் அவசியம் பட்டுக்கோட்டைக்குச் செல்லவேண்டுமாய் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தனா? இந்தப் பார்ப்பனப் பக்திக்குத் தானே மனுதர்ம சாஸ்திரம் சூத்திரத் தன்மை என்று வகுத்திருக்கிறது?

இப்படிப்பட்ட நீ, திராவிடர் கழகத்தாரை அடிக்கிறாய்! கண்ணைக் குத்துகிறாய்! வீட்டைக் கொளுத்துகிறாய்!

கடவுள் இருந்தால் உன்னை சும்மா விடுவாரா? மானம் இருந்தால் உனக்கு இன்னும் உயிர் இருந்திருக்குமா?

## என்னைக்கொல்!

என்னை அடித்தோ, கொன்றோ வெற்றி கண்டுவிட்டாயானால், அப்பொழுதாவது உனது சூத்திரப்பட்டம் ஒழிந்துவிடுமா? சொல்! நிஜமாகவே சொல்! நானே விஷம்குடித்து செத்துப் போகிறேன். நீ இல்லாவிட்டாலும் எந்தப் பார்ப்பனனை யாவது சொல்லச்சொல்! நிஜமாகவே விஷம் குடித்துச் செத்துப்போகிறேன். உனக்கு என்னைக் கொல்லவேண்டிய கஷ்டம்கூட வேண்டாம்.

காங்கரஸ் தம்பி! இந்து லாவைப் பார்!

சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பார்! மந்திரிசபையைப் பார்!

இடைக்கால சர்க்கார் மந்திரி சபையைப் பார்!

ஹைகோர்ட்டைப் பார்!

ஐ சி எஸ். வர்க்கத்தைப் பார்!

தேசியப் பத்திராதிபர்களைப் பார்!

தேசிய 'வீராங்கனை'களான விஜயலட்சுமி, ருக்மணி லட்சுமிபதி, கேப்டன் லட்சுமி ஆகியவர்கள் பதவிகளைப் பார்! அதே சமயத்தில்,

1. காமராஜரைப் பார்!
2. முத்துராமலிங்க தேவரைப் பார்!
3. கல்யாணசுந்தர முதலியாரைப் பார்!
4. திரிகூட சுந்தரம் பிள்ளையைப் பார்!
5. வரதராஜுலு நாயுடுவைப் பார்!

ஏன்! ராமசாமியையே பார்!

## இரு இனங்கள் தம்பி!

இவர்கள் எல்லாம் தேசபக்தர்களாக, ராஷ்டிரபதிகளாக, தமிழ்நாட்டு "முடிசூடா மன்னர்"களாக, இதே பார்ப்பனர்களால், மதிக்கப்பட்டவர்கள்! தேசியத்தால் பொருளோ, பட்டமோ, பதவியோ, அடையாதவர்கள் என்பது மாத்திரமல்லாமல், தேசிய, "நாதிஅற்ற" பிணமாகச் சிதம்பரம்பிள்ளைபோல, சாகப்போகிறவர்கள்!

எந்தப் பார்ப்பான் இன்று காமராஜரை வரவேற்கிறான்?

முத்துராமலிங்க தேவர் விலாசம் என்ன?

திரிகூடசுந்திரம் எம். ஏ, பி. எல். வக்கீல் வேலையை விட்டவர். இவர் எந்த உலகத்தில் இருக்கிறார் என்பதுகூட மக்களுக்குத் தெரியாது!

சத்தியமூர்த்தி அய்யர் கோவணம் கட்டாத காலத்தில் சிதம்பரம்பிள்ளை கப்பலோட்டிய தேசபக்தர். ஜெயிலில் பல வருஷம் மூத்திரச்சட்டியில் தண்ணீர் குடித்த தியாகி—அவர் பிள்ளை குட்டிகள் சோற்றுக்குப் பாடுபடுகின்றன!

சத்தியமூர்த்தி குடும்பமோ, பங்களா வாழ்வு, பிரபு வாழ்க்கை வாழ்கிறது. ஒரு பொய் பித்தலாட்டமிருக்காது, சிதம்பரம்பிள்ளையிடத்தில்.

ஆனால், ஒரு சத்தியம், நாணயம் என்பது மிகமிகக் கடினம் சத்தியமூர்த்தியிடத்தில்!

விந்த ... வாழ்வுக்குக் காரணம், சிதம்பரம்பிள்ளை சூத்திரன்'

சத்தியமூர்த்திஅய்யர் பிராமணர்!

ஒரு வரதாச்சாரி தேசியத்தின் பேரால் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறார்?

ஒரு கல்யாணசுந்தரம் புத்தகம் விற்றால், அச்சுக்கூலி கிடைத்தால், சாப்பாடு!

இருவர் யோக்கியதைக்கும் காரணம் என்ன?

வரதாச்சாரி பிராமணர்! கல்யாணசுந்திரமுதலியார் சூத்திரர்!

## உண்மைத் தியாகி!

தொழிலாளர் பேரால் ஒரு இரி மந்திரியானார்!

காங்கரசில் சேராமலிருந்தால் எவ்வளவோ உயர் பதவிக்கு வந்திருக்கவேண்டிய சர்க்கரை செட்டியார், தொழிலாளருக்கு அல்லும் பகலும் பாடுபட்டு சாதாரண மனிதராக ஆன, உண்மைத் தியாகி, சக்கரைச் செட்டியார் சங்கதியே காங்கரசில் தெரிய முடியவில்லை. அவருக்கு மந்திரியில்லை!

காரணம், இரி பிராமணர்! சர்க்கரைச்செட்டியார் சூத்திரர்!

"திவான்பகதூர் பட்டங்களை விட்ட ராமலிங்கஞ் செட்டியார், சீதாராம ரெட்டியார், எம். கே. ரெட்டியார் இவர்கள் கதி என்ன? எப்படி இருக்கிறார்கள்?

அதே சமயத்தில், ஏகாதிபத்திய சம்பளக் கூலி'யாயிருந்த சர் கோபாலசாமி அயயங்கார் நிலை எப்படி இருக்கிறது?

முன்னையவர்கள் அநாமதேயங்களாகி விட்டார்கள். பின்னையவர் அரசியல் நிர்ணயசபையில் நடுநாயகமாக ஆக்கப்பட்டு விட்டார். அதுவும் "சர்" பட்டத்தோடு! காரணம் என்ன? அவர்கள் சூத்திரர்கள்! இவர்கள் பிராமணர்கள்!

குறிப்பு:—விளையாட்டு யோசனையில் இந்தச் சங்கதியை எழுத ஆரம்பித்தேன். எழுத எழுத ஆத்திரம்! நெஞ்சு துடி துடிப்பு! கை நடுக்கம்! கண்களில் கண்ணீர் திரை ஏற்பட்டு மேலால் எழுத முடியாமல் போயிற்று! இல்லாவிட்டால் இன்னமும் எழுதியிருப்பேன்.

ஆகையால் தம்பி! இதோடு நிறுத்தி விட்டேன்- நீ காங்கரஸ் ஆணவம்கொண்டு தலைகீழாகக் குதித்து உன் திராவிடத் தோழர்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாதே! செய்ய நினைக்காதே!

காங்கரசில் நீ சிறிது வாலாட்டினால் உடனே உன்னை ஒழித்துவிட்டு உன்னைவிட மிக மிக மோசமான, ஏன்? "கேடி"களையும், சோம்பேறிகளையும் பிடித்து "ஆகஸ்ட்" தியாகி, "செப்டம்பர் தியாகி" என்று பெயர்கொடுத்து, உன்னையே அடிக்கச் சொல்வார்கள்!

ஆதலால் உன் இனத்தைப் பார்! உன் இழிவைப்பார்! எதிரிக்கு ஆளாக இருந்து உன் சகோதரனைக் காட்டிக்கொடுக்காதே! அவன் கொல்லப்படுவதற்குப் பாணமாய் இருக்காதே!

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.